# ஆறுமுகநாவலர்



சைவசமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் அரும் பெரும் பணியாற்றிய சைவத் தமிழ்ப் பெருமகனார் ஆறுமுகநாவலர் ஆவர். இவர் 1822 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆந் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை; தாயார் பெயர் சிவகாமி அம்மையார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஆறுமுகம். தமிழ்நாட்டின் புகழ்மிக்க சைவ ஆதீனமாக விளங்கிய திருவாவடுதுறை ஆதீனம் இவரின் சைவத் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி "நாவலர்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அன்று முதல் ஆறுமுகநாவலர் என அழைக்கப்படலானார்.

ஆறுமுகநாவலர் வாழ்ந்து பணியாற்றிய காலம், இலங்கையையும், இந்தியாவையும் ஆங்கிலேயர் அரசாட்சி செய்த காலம். மேற்கத்தைய கலாசாரம் ஆங்கிலக்கல்வி முறை, வேற்றுமதச் செல்வாக்கு என்பன அப்பொழுது மக்களிடையே பரவியிருந்தன.

அதேவேளை சைவசமயம், தமிழ்மொழி, சைவமரபுக்கல்வி, சைவத் தமிழ்க் கலாசாரம் என்பன சிறப்பிழந்த நிலையிற் காணப்பட்டன. ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலச் சூழ்நிலையே சைவசமயத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு அவரைத் தூண்டியது. சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக அவர் செய்த தியாகங்கள் அளப்பரியன.

நாவலர் இளமைப் பருவத்திலேயே கல்வி, அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கினார். சிவபக்தி நிறைந்தவராகவும், சைவ ஆசாரசீலங்களை வாழ்க்கையில் இம்மியளவும் தவறவிடாது கடைப்பிடிப்பவராகவும் திகழ்ந்தார். சைவசமயச் சூழலில் சைவப் பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்பதை உணர்ந்த நாவலர் வண்ணார்பண்ணையிலும், சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் பாடசாலைகளை நிறுவினார்.

சைவப் பிள்ளைகள் கற்பதற்கு ஏற்ற சமய நூல்களையும், பாடநூல் களையும் எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும் அச்சுக்கூடங்களை, வித்தியாபாலன அச்சு இயந்திரசாலை என்னும் பெயரில் நிறுவினார். ஏட்டுச்சுவடிகளாக இருந்த பழைய சைவநூல்கள், தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் சிலவற்றையுந் தாமே பரிசோதித்து அச்சிற் பதிப்பித்து அவற்றை அழியாமற் பாதுகாத்தார்.

சைவசமயத்திற்கும், பண்பாட்டிற்கும் எதிராக அக் காலத்தில் எழுந்த செயற்பாடுகளுக்கெல்லாம் நாவலர் தகுந்த பதில் அளித்தார். சைவத்தை விட்டுப் பிற மதம் புகுந்தோரிற் பலர் சைவசமயத்தின் உண்மையை உணர்ந்து மீண்டும் சைவசமயத்திற்கு வந்ததுடன் அதனை இறுகப் பற்றவும் வழி பிறந்தது. சைவமும், தமிழும் காப்பாற்றப்பட்டன. ஆறுமுகநாவலர் சமயத் தொண்டுடன் கஞ்சித் தொட்டித் தருமம் போன்ற சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டார். வரலாற்றுப் புகழ்மிக்க கீரிமலைச் சிவன்கோயில், திருக்கேதீச்சரம் என்பவற்றின் மூர்த்தி, தல தீர்த்தச் சிறப்புக்களை வெளிப்படுத்தியதுடன், அவற்றின் புனருத்தாரணப் பணிகளுக்கும் முன்னின்று உழைத்தார்.

ஐந்தாங்குரவர் எனப் போற்றப்பட்ட ஆறுமுகநாவலர் 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாத மக நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார். சைவமும், தமிழும் தமது இரு கண்கள் எனப் போற்றி வாழ்ந்த நாவலர் பெருமான் முத்தியடைந்த தினத்தில் அவர் பொருட்டுக் குருபூசை நடாத்துதல் நம் கடனாகும்.

**அறிஞர்களை என்றும் மறவோம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) ஆறுமுக நாவலரின் தாய் தந்தையரின் பெயர்கள் யாவை?
(2) இவருக்கு நாவலர் எனும் பட்டத்தை வழங்கிய ஆதீனம் எது?
(3) ஆறுமுகநாவலர் உருவாக்கிய சைவவித்தியாசாலைகள் எவை?
(4) ஆறுமுகநாவலர் ஆற்றிய சைவப் பணிகள் மூன்று தருக.
(5) ஆறுமுகநாவலர் இறைவனடி சேர்ந்த தினம் யாது?

## செயற்பாடு

* "குருபூசை" பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.
* ஆறுமுகநாவலரின் குருபூசை தினத்தைப் பாடசாலையில் கொண்டாடுங்கள்.
* அறுமுகநாவலர் சைவ வினாவிடையில் கூறியபடி சைவ அநுஷ்டானங்களைத் தினமும் கடைப்பிடியுங்கள். இது பற்றி ஆசிரியரின் அறிவுரையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.